**மத்திய நுவரகம்பலாத பிரதேச சபை - 2023**

**-----------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மத்திய நுவரகம் பலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்ான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,844,420 பெறுமதியான குப்பை அரைக்கும் நிலையம் மற்றும் நீர்த்தாங்கிக்காக 2023 ஆம் வருடத்திற்காக ரூபா 43,834 ஆன தேய்மானம் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற மகப்பேற்று மருத்துவமனைக் கட்டிடத்தில் ரூபா 793,804 ஆன பணிகள் மட்டும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் சான்றுபடுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,337,323 ஆன மொத்தச் சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் ரூபா 543,519 ஆல் அதிகரித்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2021 ஆம் வருடத்தில் அச்சுக்கல் பதிக்கப்பட்ட வீதி நிர்மாணிப்பதற்காக பெறப்பட்ட ரூபா 283,490 ஆன மூலதன மானியம் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்த தவறை திருத்துவதற்குப் பதிலாக மீண்டும் ஒரு முறை மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் மூலதன மானியம் ரூபா 566,980 ஆக அதிகரித்திருந்தது | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் வீதி விளக்குகளின் இருப்பு ரூபா 101,942 ஆக இருந்த போதிலும் அது ரூபா 129,000 ஆக அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | சபைக்குச் சொந்தமான நிலையான வைப்புக் கணக்கொன்று காசு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 18 முதல் 2023 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கான ரூபா 34,964 ஆன வட்டி கணக்கீடு செய்யப்பட்டிராததுடன், நிலையான வைப்பிற்கான 2024 இற்கு பெற வேண்டியவட்டி ரூபா 40,362 மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | குப்பை முகாமைத்துவ நிலையத்தில் குழாய்க் கிணறு சுத்தம் செய்யும் பணிகளுக்காக LDSP செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 71,300 ஆன மீண்டெழும் செலவுகள் மூலதன மானியத்தில் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 2023 ஆம் ஆண்டில் அரச சேவை சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத போதும் ரூபா 785,218 ஆனது அட்டுறு செலவாக காட்டப்படாது கொடுப்பனவாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதி விளக்குகள் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் 2023 ஆம் வருடத்தில் கொள்வனவுகள் ரூபா 832,800 ஆக இருந்த போதிலும் LG 13 அறிக்கையின் பிரகாரம் கொள்வனவு ரூபா 789,630 ஆக இருந்தமையால் ரூபா 43,170 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். | வேறுபாட்டிற்கான காரணம் கண்டு பிடிக்கப்பட்டு திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்று குறிப்புக்களில் காட்டப்பட்டுள்ள பொது களஞ்சிய இருப்பு மீதி ரூபா 168,249 ஆக இருந்த போதிலும் பொது களஞ்சியப் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 152,949 ஆக இருந்தமையால் ரூபா 15,300 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அட்டவணையின் பிரகாரம் அரச சேவை சேமலாப நிதியத்திற்கு 2023 ஆம் ஆண்டில் கொடுப்பனவு ரூபா 653,164 ஆக இருந்த போதிலும் பேரேட்டின் பிரகாரம் அது ரூபா 785,218 ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 132,054 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | பிரதேச சபைக்குச் சொந்தமான காணி | 90,960,000 | (i) காணியின் உரிமையை உறுதிப்படுத்தும் கையளிப்புச் சான்றிதழ்<br>(ii) உறுதிப் பத்திரம்<br>(iii) காணி அளவீட்டு அறிக்கை | ஏற்றுக் கொள்கிறேன். | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் | 1,129,813 | (i) அட்டவணைகள் | ஏற்றுக் கொள்கிறேன். | உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | அரச சேவை சேமலாப நிதியத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட பணம் | 1,520,745 | (i) அட்டவணைகள் | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திமெசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 699,149 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 5,616,894 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய வருடத்துடன் தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2023 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம | சேகரிக்கப் பட்ட வருமானம் | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,068,000 | 4,374,187 | 4,294,437 | 794,834 | 2,249,224 | 2,401,534 | 1,790,450 | 715,084 |
| (ii) | வாடகை | 9,148,384 | 7,187,603 | 7,274,603 | 1,470,809 | 7,550,236 | 6,476,026 | 6,385,414 | 1,557,809 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,242,200 | 1,192,300 | 2,856,400 | 381,450 | 6,156,600 | 6,144,636 | 5,912,336 | 2,045,550 |
| (iv) | ஏனைய வருமானம் | 37,810,917 | 27,066,643 | 22,781,237 | 30,229,344 | 30,974,200 | 17,284,759 | 11,186,184 | 25,943,938 |
| | | 51,269,501 | 39,820,733 | 37,206,677 | 32,876,437 | 46,930,260 | 32,306,955 | 25,274,384 | 30,262,381 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தலின் செயல்திறன் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் ரூபா 254,700 ஆக காணப்பட்ட வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி நிலுவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை ரூபா 622,250 வரை 144 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்த போதிலும் அறவிடப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை அறவிடுதல் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ii) | பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் குப்பை வரி சேகரிப்பதற்காக பெற வேண்டிய ரூபா 1,823,550 மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | வீட்டு அலகுகளுக்கான மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட ரூபா 409,400 ஆன குப்பை வரிகளிலிருந்து மீளாய்வாண்டில் 50 சதவீதமான ரூபா 204,600 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. | -மேற்படி- | நடப்பாண்டு வருமானத்தை அறவிடுதல் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (iv) | 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட ரூபா 233,600 ஆன நிலுவை குப்பைக் கட்டணங்களிலிருந்து ரூபா 70,600 மட்டும் மீளாய்வாண்டில் | -மேற்படி- | நிலுவை வருமானத்தை அறவிடுதல் விரைவு படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிலுவை குப்பைக் கட்டணங்களிலிருந்து 70 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | **வாடகை** | | |
| | இறைச்சிக் கடை, மீன் பலகை மற்றும் வார சந்தைகளை குத்தகைக்கு விடப்பட்டமைக்காக பெற வேண்டிய ரூபா 1,445,809 ஆனது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இறைச்சிக் கடைகளுக்கான ரூபா 25,000 ஆனது அறவிடப்பட்டுள்ளதாக மற்றும் மிகுதி நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக | -மேற்படி- |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | | |
| (i) | சந்தை அனுமதிப்பத்திரத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 46,750 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சபையின் அதிகாரப் பிரதேசங்களில் அமைந்துள்ள சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றின் வருடாந்த வருமானத்திற்காக அறவிட வேண்டிய 01 சதவீதமான அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | **ஏனைய வருமானம்** | | |
| (i) | விளம்பரப் பலகைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 334,700 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிரந்து 2023 திசெம்பர் 31 இல் பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டம் ரூபா 2,920,589 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 25,484,455 ஆனது அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்றத் தண்டம் மற்றும் முத்திரைக் கட்டணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக | -மேற்படி- |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 முக்கிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு உப விதிகள் விதிக்கப்படுவதற்கு முடியுமான போதிலும் 2023 திசெம்பர் 31 வரையில் அந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக | உப விதிகள் விதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் வீதிகள், கால்வாய்கள், பாலங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காக ரூபா 10,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 3,657,606 மட்டும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டு சரளைக்கல் வீதி பழுதுபார்க்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டில் 37 சதவீதமான குறைந்தளவு சதவீதமொன்றாகும். | ஆளுநரின் அங்கீகாரம் பெறப்படுவதற்கு தாமதமாகியதால் நிறைவேற்றப்பட முடியாதிருந்தாக | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டம் குறிப்பிட்ட வருடத்திற்குள் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

## 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2023 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நலன்புரி கொடுப்பனவுகளின் கீழ் ரூபா 9,475,000 ஆன மொத்த ஒதுக்கீட்டிலிருந்து 85 சதவீதமான ரூபா 8,025,000 ஆனது ஏனைய நலன்புரி செலவுகளாக மட்டும் பதிவிடப்பட்டிருந்ததுடன், அப்பணிகள என்ன என்பது திட்டவட்டமாக இணங் காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதாக | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 சுற்றுச்சூழல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| லோலுகஸ்வேவவில் அமைந்துள்ள திண்மக்கழிவு மீள்சுழற்சி மேற்கொள்ளப்படுகின்ற குப்பை முகாமைத்துவ நிலையத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் மற்றும் 2024 ஆம் ஆண்டில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வது விரைவு படுத்தப்பட வேண்டும். |